# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012



ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779



★மலர்:05 ★இதழ்:131 ★11.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:131 ★11.09.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai




மாவட்ட ஆட்சியரால் கைவிடப்பட்ட சின்னமனூர் நகராட்சி:

## சாக்கடை கலந்த குடிநீரால் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சுகாதார சீர்கேடு

தேனி,செப்.11

தேனி மாவட்டம் சின்ன மனூர் நகராட்சியில் நி ரந்தர ஆணையாளர் இல்லாததால் நிர்வாக ப ணிகள் முற்றிலுமாக மு டங்கி கிடப்பதுடன், ந கரம் முழுவதும் சுகா தார சீர்கேடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நகராட்சியின் அன்றாட பணிகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு ஆணையாளர் உமாசங்கர், தனக்கு கூடுதல் பொறுப்பு மட்டுமே என்பதால் மக்கள் சந்திக்கும் அத்தியாவசிய புகார்களை கூட கண்டுகொள்ளாமல் அலட்சியம் காட்டி வருவதாக பொது மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக ஓடைத் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சாக்கடைகள் தூர்வாரப்படாமல் துர்நாற்றம் வீசி வருகிறது. மேலும், நகரில் புதிதாக கட்டப்பட்ட பொதுக் கழிப்பறைகள் பூட்டியே கிடப்பதோடு, விஸ்வங்குள பூங்கா பராமரிப்பின்றி பாழடைந்து வருவது உட்பட நகராட்சி முழுவதும் பராமரிப்பு பணிகள் முடங்கியுள்ளன. குறிப்பாக, அரசு அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் அதிகம் வசிக்கும் அண்ணாமலை நகர் பகுதியில், குடிநீரில் பெருமளவில் சாக்கடை நீர் கலந்து வருவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. குடிநீரில் பிளீச்சிங் பவுடர் மற்றும் சுத்திகரிப்பு பொருட்களை பயன்படுத்தினாலும் பயன்படுத்த முடியாத அளவிற்கு துர்நாற்றத்துடன் சாக்கடை கழிவுநீரே வருகிறது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை மனுக்கள் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அரசு ஊழியர்கள், தங்களது கௌரவத்தை பொருட்படுத்தாமல் அத்தியாவசிய குடிநீருக்காக தன்னிச்சையாக விடுப்பு எடுத்து "சாலை மறியல் மற்றும் "பஸ் மறியல்" போராட்டத்தில் ஈடுபட தயாராகி வருகின்றனர். ஏற்கனவே நகராட்சி நிர்வாகத்தின் அவல நிலை குறித்து செய்திகள் வாயிலாக மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டும், இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் சின்ன மன்னூர் நகராட்சி கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது. சமூக வலைதளங்கள் மற்றும் வாட்ஸ் அப் மூலம் பொறுப்பு ஆணையாளருக்கு புகார்கள் அனுப்பப்பட்டும் அவர் எதையும் பொருட்படுத்தவில்லை. நகரில் பெருமளவில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு சாக்கடை கலந்த குடிநீர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், சீர்குலைந்துள்ள நகராட்சி நிர்வாகத்தை விரைந்து சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்

அரசு மாதிரிப் பள்ளி மாணாக்கர்களுக்கான

## அறிவியல் வெற்றிப் பாதை கல்விச் சுற்றுலா பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்



இராணிப்பேட்டை,செப்.11

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், பள்ளிக் கல்வித்துறை சார்பில் வெற்றிப் பாதை 2026 2027 திட்டத்தின் மூலம் இராணிப்பேட்டை மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி மாணாக்கர்களுக்கான அறிவியல் வெற்றிப் பாதை கல்விச் சுற்றுலா பயணத்தை தொடங்கி வைத்து, மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கல்விச் சுற்றுலாவில் 45 மாணாக்கர்களும் 5 ஆசிரியர்களும் செல்கின்றனர்.

இச்சுற்றுலா மூலம் மாணாக்கர்கள் சென்னை 'கோட்டூர்புரம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் மற்றும் பிர்லா கோளரங்கத்திற்கு பயணம் மேற்கொண்டனர்.

அங்கு அறிவியல் கண்டுபிடிப்புகள், செயல்முறை விளக்கங்கள், விண்வெளி ஆராய்ச்சி மற்றும் கோள்கள் குறித்த அனைத்து விஷயங்களையும் நேரடியாக தெரிந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மோகனா மற்றும் அரசு மாதிரிப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டனர்.

100 நாள் வேலைத் திட்டத்தில் கண்ரேகை பதிவை ரத்து செய்க

# சாட்டையால் அடித்துக்கொண்டு விவசாயிகள் நூதன போராட்டம்

## குடிநீர், முதலுதவி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்க வலியுறுத்தல்



செய்யாறு, செப்.11

100 நாள் வேலைத் திட்டப் பணிகளில் கண்ரேகை பதிவு முறையை ரத்து செய்ய வேண்டும், பணித்தளங்களில் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, வடக்கு மண்டல விவசாயிகள் சங்கம் சார்பில் செய்யாறு பேருந்து நிலையம் முன்பு விவசாயிகள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது விவசாயிகள் தங்களைத் தாங்களே சாட்டையால் அடித்துக்கொண்டு தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கூறியதாவது:

100 நாள் வேலைத் திட்டத்துக்காக ஆண்டுதோறும் ரூ.7,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 90 லட்சம் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இதன் மூலம் கிடைக்கும் வருவாயை கணக்கிட்டால் ஒரு நாளுக்கு சராசரியாக ரூ.22 மட்டுமே கிடைக்கும் நிலை இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

100 நாள் வேலைத் திட்டப் பணிகளுக்கு வரும் தொழிலாளர்களுக்கு கண்ரேகை பதிவு முறையால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. காலை 8 மணிக்கு பணிக்கு வந்தாலும், கண்ரேகை பதிவு மற்றும் வருகைப் பதிவு நடைமுறைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

இதனால் தொழிலாளர்கள் 8 மணி நேரத்துக்கும் மேலாக பணித்தளத்தில் கட்டுப்படுத்தப்படுவதாகவும், இது அவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டினர்.

மேலும், கண்ரேகை பதிவு தொடர்பாக பிரச்சினைகள் எழும்போது தொழிலாளர்களிடம் அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்வதாகவும், கேள்வி எழுப்பினால் பணியில் இருந்து நீக்கப்படுவோம் என்ற அச்சம் நிலவுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பணிக்கு வரும் அனைவருக்கும் பணித்தளங்களில் பாதுகாப்பான குடிநீர்வசதி ஏற்படுத்த வேண்டும். அவசர காலங்களில் பயன்படுத்த முதலுதவி பெட்டி கட்டாயம் வைக்க வேண்டும். பணித்தளம் 2 கிலோமீட்டருக்கு மேல் தொலைவில் இருந்தால் தொழிலாளர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்த வேண்டும்.

பணிக்கு வருகையை பதிவு செய்ய பயோமெட்ரிக் முறையை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக தொழிலாளர்களுக்கு எளிதான, வெளிப்படையான முறையை அரசு கொண்டு வர வேண்டும். 15 நாட்களுக்குள் சம்பளம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 100 நாட்கள் முழுமையான வேலை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உருவாக்கப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தில், தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை சிக்கல்களுக்கு தமிழக அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும். பணித்தளங்களில் குடிநீர், முதலுதவி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், கண்ரேகை பதிவு முறையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காண வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

"மக்களை காப்பாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தியே இந்த நூதன போராட்டம் நடைபெற்றதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# காரீப் பயிர் கணக்கெடுப்பு: 11.13 லட்சம் உட்பிரிவுகளில் பதிவு பணி தீவிரம்

## திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு



திருவண்ணாமலை, செப்.11

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் விவரங்களை பதிவு செய்யும் மின்னணு பயிர் சாகுபடி பரப்பு கணக்கெடுப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணியை விரைந்து முடிக்கும் வகையில் கூடுதல் தன்னார்வலர்கள் தேவைப்படுவதால், ஆர்வமுள்ள விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது. மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள காரீப் பருவ பயிர்களை கணக்கெடுக்கும் பணியில் வேளாண்மை–உழவர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும் இக்கணக்கெடுப்பின் மூலம் ஒவ்வொரு நிலத்தின் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் விவரங்கள் செயலியில் பதிவு செய்யப்படுகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 18,93,264 உட்பிரிவு எண்கள் உள்ள நிலையில், காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 7,74,663 உட்பிரிவுகள் செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள உட்பிரிவுகளிலும் கணக்கெடுப்பு மற்றும் பதிவுபணிகளைவிரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பணியை வரும் 15ம் தேதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய வேண்டியுள்ளதால், கூடுதல் தன்னார்வலர்கள் தேவைப்படுகின்றனர். இதையடுத்து ஆண்ட்ராய்டு செல்போனை பயன்படுத்தத் தெரிந்த ஆர்வமுள்ளவிவசாயிகள், இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இப்பணியில் பங்கேற்க மாவட்ட நிர்வாகம் வாய்ப்பு வழங்கியுள்ளது.

மின்னணு பயிர்சாகுபடி கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் தன்னார்வலர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்படுகிறது. நடப்பு தரிசு நிலப் பதிவுக்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.3, முதன்மை பயிருக்கான ஒரு உட்பிரிவு எண்ணுக்கு ரூ.5, கூடுதல் பயிர் ஒன்றுக்கு ரூ.2 எனவும், அதிகபட்சமாக ரூ.9 வரை மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. மலைப்பகுதி கிராமங்களில் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்புக்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.10 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

இந்த கணக்கெடுப்பு பணியில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பணியில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

மாவட்டத்தில் காரீப் பருவ பயிர்களின் சாகுபடி பரப்பை துல்லியமாக பதிவு செய்து, வேளாண்மை சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கு இந்த மின்னணு கணக்கெடுப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதால், தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் அதிகளவில் பங்கேற்று பணியை குறித்த காலத்திற்குள் நிறைவு செய்ய ஒத்துழைக்க வேண்டும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

## ரூ.38 லட்சம் பெற்றதாக புகார்: பாஜக நிர்வாகி அஸ்வத்தாமன் மீது எஸ்.பி. அலுவலகத்தில் புகார்

### பணம் கேட்டால் கொலை மிரட்டல் விடுப்பதாக பாலசுப்பிரமணியன் குற்றச்சாட்டு



திருவண்ணாமலை, செப்.11

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது பாஜக நிர்வாகி அஸ்வத்தாமன் தன்னிடம் ரூ.38 லட்சம் பணம் பெற்றதாகவும், இதுவரை அந்தத் தொகையை திருப்பி வழங்கவில்லை என்றும் 'வீ த லீடர்ஸ்' மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். மேலும், பணத்தை திருப்பிக் கேட்டபோது கொலை மிரட்டல் விடுப்பதாகவும் புகாரில் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகார் தொடர்பாக காவல்துறை உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாலசுப்பிரமணியன் கோரிக்கைவிடுத்துள்ளார்.

பாலசுப்பிரமணியன் ஏற்கனவே பாஜகவின் திருவண்ணாமலை மாவட்ட தலைவராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசபக்தி

11.09.2026 வெள்ளிக்கிழமை

# சின்னமனூர் காவல்துறை நடவடிக்கை எடுக்குமா?

## போலி சாதுக்களால் அச்சத்துடன் வாழும் பொதுமக்கள்

தேனி,செப்.11

தேனி மாவட்டம் சின்ன மனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள நகர்ப்புற பகுதிகள் முழுவதும் காவி உடை அணிந்து, சாதுக்கள் என்ற போர்வையில் உலா வரும் போலி சாதுக்களின் அத்துமீறல்கள் நாளுக்கு




நாள் அதிகரித்து வருகின்றன.

பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் இரக்க குணத்தையும், தங்களின் முதிய வயதையும் சாதகமாக்கி கொள்ளும் இவர்கள், நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கும் மேல் வசூல் செய்கின்றனர்.

பின்னர் அந்த பணத்தை கொண்டு அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு, நகரின் முக்கிய வணிக வளாகங்கள், ஏடிஎம் மையங்கள் மற்றும் சினிமா தியேட்டர்களின் முன்பாக பொதுமக்களும், குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் முகம் சுளிக்கும் வகையில் அரைகுறை ஆடையுடன் வீழ்ந்து கிடக்கின்றனர். அதுமட்டுமன்றி, இவர்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள்ளும் புகுந்து, அங்குள்ள வீடுகளின் கதவுகளை தட்டிப் பணமும் பொருளும் கேட்டு தொந்தரவு செய்வதோடு, பொதுமக்களுக்கு பெரிய அளவில் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

முக்கியமாக, இரவில் கடையின் வாசல்களிலேயே அமர்ந்து மது அருந்திவிட்டு, காலியான மது பாட்டில்களை அங்கேயே உடைத்து போடுவதும், வாந்தி எடுத்து அசுத்தப்படுத்துவதும் தொடர்கதையாகி உள்ளது. இதனால், காலையில் கடையை திறக்கும் வணிகர்கள் தினமும் அந்த இடத்தை அருவருப்புடன் சுத்தம் செய்ய வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, காவல்துறையினர் சின்னமனூர் நகர் மட்டுமன்றி, தேனி மாவட்டம் முழுவதும் உடனடியாக தீவிர ரோந்து பணியை மேற்கொண்டு இவர்களை கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன், மாவட்ட நிர்வாகம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் (NGO) உதவியோடு, இவர்களை மீட்டு அரசு மறுவாழ்வு மையங்களில் சேர்த்து தகுந்த சிகிச்சையும் வாழ்வாதாரமும் வழங்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், வணிகர்களும், பொதுமக்களும் காவல்துறையினருக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.



# வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காதல் ஜோடி தஞ்சம்

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்ஜி.நடுப்பட்டி சேர்ந்த ஜீவிகா(22), அதே பகுதியை சேர்ந்த ராகுல்(22) ஆகிய இருவரும் காதலித்து கொண்டனர். இதனைத்தொடர்ந்து காதல் ஜோடி இருவரும் மலைக்கேணி முருகன் கோவிலில் திருமணம் செய்து கொண்டு பாதுகாப்பு கேட்டு வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர்.

அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் இரு வீட்டு பெற்றோரையும் அழைத்தனர் மணமகள் வீட்டார் ஏற்க மறுத்ததை தொடர்ந்து இருவரும் மேஜர் என்பதால் அவர்கள் விருப்பப்படி மணமகன் விட்டார்கள் அனுப்பி வைத்தனர்

# செய்யாறில் தூய வியாகுல அன்னை ஆலயத்தின் 81வது ஆண்டு பெருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

செய்யாறு, செப்.11

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள தூய வியாகுல அன்னை ஆலயத்தின் 81வது ஆண்டு பெருவிழா, பக்தர்கள் திரளாக பங்கேற்ற நிலையில் கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது.

விழாவையொட்டி, ஆலய உள் பிரகாரத்தில் வியாகுல அன்னையின் உருவம் பொறிக்கப்பட்ட திருவிழா கொடி பக்தர்களின் முன்னிலையில் எடுத்துவரப்பட்டது.

பின்னர் கொடியை கையில் ஏந்தியவாறு ஆலயத்தைச் சுற்றி பவனி நடைபெற்றது. தொடர்ந்து மங்கல இசை முழங்க, வானவேடிக்கைகளுடன் திருவிழா கொடியேற்றப்பட்டது. வேலூர் மறைமாவட்டத்தின் CPC இயக்குநர் பேரருட்தந்தை முனைவர் D. அருள் ஜான்போஸ்கோ தலைமையில் நடைபெற்ற விழாவில், அருட்பணி ஏ. சுதர்சன் முன்னிலை வகித்தார். கொடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து ஆலயத்தில் கூட்டுத் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

பெருவிழாவின் அடுத்த நாட்களில் சிறப்பு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இரண்டாம் நாள் நற்கருணை பெருவிழாவும், மூன்றாம் நாள் திருவிழா தியானம் மற்றும் நற்கருணை ஆராதனையும் நடைபெறுகின்றன. நான்காம் நாள் திருவிழா திருப்பலி, முதல் நற்கருணை நிகழ்வு, தேர்பவனி ஆகியவை நடைபெற்று, நிறைவாக திருவிழா கொடி இறக்கப்பட உள்ளது.

ஆண்டு பெருவிழா கொடியேற்ற நிகழ்வில் பங்கு இறைமக்கள், பங்கு பேரவை உறுப்பினர்கள், இளைஞர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்கள் தூய வியாகுல அன்னையை பக்தியுடன் தரிசித்து, சிறப்பு பிரார்த்தனைகளில் பங்கேற்றனர். பெருவிழாவையொட்டி ஆலய வளாகம் விழாக்கோலம் பூண்டுள்ளதால், தொடர்ந்து பக்தர்கள் திரளாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.




# செய்யாறில் ரக்ஷா பந்தன் விழா:

# தியானத்தின் மூலம் மன அமைதிக்கு வழிகாட்டிய பிரம்ம குமாரிகள்

செய்யாறு, செப்.11

செய்யாறில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் சார்பில் நடைபெற்ற ரக்ஷா பந்தன் விழாவில், குடும்பப் பிரச்சினைகளை எதிர்கொள்வது, மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது மற்றும் இறை நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைதியாக நடத்துவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு கிளை பிரம்ம குமாரிகள் அமைப்பு சார்பில் ஆசிரியர் தினத்தைத் தொடர்ந்து ரக்ஷா பந்தன் விழா சிறப்பாக நடைபெற்றது. செய்யாறு மார்க்கெட் அருகே உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், திருவண்ணாமலை மாவட்ட பிரம்மகுமாரிகள் அமைப்பின் இயக்குநர் டாக்டர் பி.உமா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

விழாவில், அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளால் மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் மனதை எவ்வாறு மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது என்பது குறித்து விளக்கப்பட்டது. குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து எவ்வாறு மனரீதியாக விலகி நின்று, அவற்றை அமைதியாகவும் தெளிவாகவும் எதிர்கொள்வது என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இறைவனின் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உணர்ந்து வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வது குறித்தும் தியானத்தின் மூலம் விளக்கப்பட்டது. தியானம் மன அமைதிக்கும், தெளிந்த சிந்தனைக்கும் உதவுவதுடன், பிரச்சினைகளை நேர்மறையான அணுகுமுறையுடன் எதிர்கொள்ளும் மனநிலையை உருவாக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



ரக்ஷா பந்தன் விழாவின் மூலம் சகோதரத்துவம், அன்பு, பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் செய்யாறு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை செய்யாறு கிளை பிரம்ம குமாரிகள் அமைப்பினர் சிறப்பாக செய்திருந்தனர்.




# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி,செப்.11

நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும் தேனி மாவட்ட காவல்துறையினர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.K.S .பிரவீன் கௌதம்,இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# இலாஹி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா

செங்குன்றம், செப்டம்பர் 11:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி திருவிக தெருவில் அமைந்துள்ள இலாஹி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 240 ஆசிரிய பெருந்தகைகளுக்கு ஆசிரியர் தின விழா பள்ளி தாளாளர் மௌலவி முனைவர் அ.காஜா முயீனுத்தீன் ஜமாலி தலைமையில் நடைபெற்றது.




செங்குன்றம் சுற்றுவட்டார நாடார் இளைஞர் அணி தலைவரும் தொழிலதிபருமான ஜெ.பால்ராஜ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு ஆசிரிய பெருந்தகைகளுக்கும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் பொதுத்தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி அளித்த பாட ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் கேடயம் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியைகள், பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



குமரிவட்ட தீயணைப்பு துறை மற்றும் போர்க்கால மீட்பு பணி துறையினரின் சார்பாக குழித்துறை தாமிரபரணி ஆற்றில், தண்ணீரில் மூழ்கியவரை மீட்பு படையினர் மீட்டு வருவதையும். உயரமான கட்டிடத்தில் தீ பிடித்தால் அங்கிரிப்பவர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்ற ஒத்திகை நிகழ்ச்சிகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் திரு. மு ,பிரதாப் இ.ஆ.ப முன்னிலையில் நிகழ்த்தி காட்டினார்கள். உடன் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணி அலுவலர் திரு .சத்தியகுமார் மற்றும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திருமதி .மாலதிஇ.ஆ,ப அவர்களும் உடன் இருந்தார் மற்றும் துறைகுழுவினர்கள், ஊர் மக்கள் கலந்து கொண்டனர்

# செங்குன்றம் அருகில் மூன்று செல்போன்களை பறித்துச் சென்ற மூவர் கைது

செங்குன்றம், செப்டம்பர் 11:

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி பவானிநகரைச் சேர்ந்த ரேவதி (வயது 45) என்பவர் அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் திடீரென வீட்டிற்குள் வந்து மிரட்டி மூன்று செல்போன்களை பறித்துச் சென்றதாக செங்குன்றம் காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர் பரிபூரணத்திடம் புகார் அளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து செங்குன்றம் சரக உதவி ஆணையாளர் பிராங்க் டி



ரூபன் உத்தரவுப்படி எம்4 செங்குன்றம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் பரிபூரணம் தலைமையில் வழக்குப் பதிந்து (குற்ற எண்.550/26.) தனிப்படை அமைக்கப்பட்டு தேடிவந்த நிலையில் சோழவரம் காந்திநகரைச் சேர்ந்த திவாகர் (வயது 18), அப்துல் கபீர் (வயது 25), சென்னை கொடுங்கையூர் சிவா (வயது 32) ஆகிய குற்றவாளி மூவரையும் திருவள்ளூர்கூட்டுச்சாலைஅருகே கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொண்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கட்டணமானி இல்லாமல் அதிக கட்டணம் வசூலிக்கும் ஆட்டோக்களுக்கு கிடுக்கிப்பிடி

## அதிக பயணிகளை ஏற்றிச் சென்றாலும் நடவடிக்கை; ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

திருவண்ணாமலை, செப்.11

திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதியில் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட பல மடங்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கும் ஆட்டோக்கள் மீதும், கட்டணமானி பொருத்தாமல் இயக்கப்படும் ஆட்டோக்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரித்துள்ளார்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோயிலுக்கு தரிசனம் செய்வதற்காகவும், கிரிவலம் செல்வதற்காகவும் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

தொடர்ந்து பக்தர்களின் வருகை அதிகரித்து வரும் நிலையில், கார்த்திகை தீபம், சித்ரா பௌர்ணமி உள்ளிட்ட முக்கிய நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணா மலைக்கு வருகின்றனர்.

இந்த நிலையில், திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதியில் இயங்கும் சில ஆட்டோக்களில் கட்டணமானி பொருத்தப்படாமல் பயணிகளிடம் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட பல மடங்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்வதாகவும் மாவட்ட நிர்வாகத்துக்கு தொடர்ந்து புகார்கள் வந்துள்ளன.

இதையடுத்து, அரசின் விதிமுறைகளை மீறி கட்டணமானி பொருத்தாமல் இயக்கப்படும் ஆட்டோக்கள், அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கும் ஆட்டோக்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்காக திருவண்ணாமலை மற்றும் ஆரணி வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். விதிமுறைகளை மீறும் ஆட்டோக்களை சிறைப்பிடித்து, அவற்றின் அனுமதிச் சீட்டு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலைக்கு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் நியாயமான கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

அரசின் உத்தரவுகளை தொடர்ந்து மீறி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ ரிக்ஷாக்களை இயக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரித்துள்ளார்.

தேசபக்தி



# ஆசிரியர்களின் சேவைக்கு செய்யாறில் சிறப்பு அங்கீகாரம்: ஞானபீட விருது வழங்கி சிறந்த ஆசிரியர்களுக்கு கவுரவம்

செய்யாறு, செப்.11

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் உதவும் கரங்கள் மற்றும் இன்னர்வீல் சங்கம் சார்பில் ஆசிரியர் தினத்தையொட்டி முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பாக பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு ஞானபீட விருதுகள் வழங்கப்பட்டதுடன், சிறந்த பள்ளி மற்றும் மாணவர்களுக்கும் பாராட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு உதவும் கரங்கள் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு உதவும் கரங்கள் நிறுவனர் தி.எ. ஆதிகேசவன் தலைமை வகித்தார்.

செய்யாறு உதவும் கரங்கள் தலைவர் சி.ரவிபாலன், செய்யாறு இன்னர்வீல் சங்க தலைவர் மு. உமா மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளையொட்டி கொண்டாடப்படும் ஆசிரியர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில், கற்பித்தல் பணியில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஆசிரியர்களுக்கு ஞானபீட விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மு.கேசவன், விருது பெற்ற ஆசிரியர்களுக்கு ஞானபீட விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

செய்யாறு வீட்டுவசதி வாரியம் அருகேயுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் எம். லதா, செய்யாறு அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி முதுநிலை ஆசிரியர் வி.ஆறுமுகத்தாய், மேட்டுஎச்சூர் அரசு உயர்நிலைப்பள்ளி தமிழ் பட்டதாரி ஆசிரியர் எம்.வசந்தா, அல்லியந்தல் அரசு உயர்நிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் ஜி.வேல்முருகன், தவசி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பி.தாரணி, இளநீர்குன்றம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.அமுதவாணி ஆகியோர் ஞானபீட விருதுகளை பெற்றனர்.

மேலும், பெருந்தலைவர்காமராசர்பிறந்தநாளையொட்டி நடைபெற்ற சிறந்த பள்ளி ஊக்குவிப்பு பரிசளிப்புதிட்டத்தில்திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக தேர்வு செய்யப்பட்டு ரூ.75 ஆயிரம் பரிசு பெற்ற அல்லியந்தல் அரசு உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் பி. மாலவன் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, திருக்குறளின் 1,330 குறள்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்ற வந்தவாசியைச்சேர்ந்த 6ம் வகுப்பு மாணவி சு.அ.புவனிகா மற்றும் அவருக்கு பயிற்சி அளித்த ஆசிரியர் ரஷீனாபேகம் ஆகியோருக்கு பாராட்டு மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் பணிகள் மற்றும் சிறந்த பள்ளிகளின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இந்த முப்பெரும் விழாவில், செய்யாறு உதவும் கரங்கள் மற்றும் இன்னர்வீல் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# வழிகாட்டி மதிப்பு வரைவு பதிவேடு வெளியீடு: 15 நாட்களுக்குள் ஆட்சேபனைகள் தெரிவிக்கலாம் - ஆட்சியர் வந்தனா கார்க்


திருவண்ணாமலை, செப்.11

திருவண்ணாமலை மாவட்டத்தில் வழிகாட்டி மதிப்புகளை சீரமைப்பது தொடர்பாகதயாரிக்கப்பட்டுள்ளவரைவு வழிகாட்டி பதிவேடுகள் பொதுமக்களின் பார்வைக்காக சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வரைவு பதிவேடுகளின் விவரங்களை பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்புகளை சீரமைப்பது தொடர்பாக இந்திய முத்திரைச் சட்டம், 1899ன் பிரிவு 47AAன் கீழ் தமிழ்நாடு முத்திரை விதிகள், 2010ன் விதி 4(2)ன் அடிப்படையில் மைய மதிப்பீட்டுக் குழு கூட்டம் கடந்த ஜூலை 15ம் தேதி நடைபெற்றது. அக்கூட்டத்தில் வழிகாட்டி மதிப்புகளை சீரமைப்பது தொடர்பாகவழிகாட்டி உயர்மட்டக்குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட 8 வகையான முரண்பாடுகளை களைவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, முரண்பாடுகள் களையப்பட்டு சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகளை அங்கீகரிப்பதற்காக மாவட்ட துணைக்குழுக் கூட்டம் கடந்த செப்.8ம் தேதி மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில்நடைபெற்றது.கூட்டத்தில் வரைவு வழிகாட்டி பதிவேடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதையடுத்து திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்கள் வாரியாக முரண்பாடுகள் களையப்பட்ட வரைவு வழிகாட்டி பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், வரைவு வழிகாட்டி பதிவேடுகளின் விவரங்கள் www.tnreginet.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வரைவு வழிகாட்டி பதிவேடுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் அல்லது கருத்துக்கள் இருந்தால், அவற்றை 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மதிப்பீட்டுத் துணைக்குழு முன்பு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர்வந்தனாகார்க் தெரிவித்துள்ளார். ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய முகவரி: மதிப்பீட்டுத் துணைக்குழு அலுவலகம்,மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),மாவட்டப் பதிவாளர் அலுவலகம், ஜவான்ஸ் பவன் கட்டிடம்,தமிழ்நாடு ஹோட்டல் அருகில், போளூர் மெயின்ரோடு,திருவண்ணாமலை – 606 601. வழிகாட்டி மதிப்புகள் சீரமைப்புகள் தொடர்பாக பொதுமக்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை உரிய காலக்கெடுவுக்குள் தெரிவிக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.



தேனி மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்டவேலைவாய்ப்புமற்றும்தொழில்நெறிவழிகாட்டும்மையம்மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.





பழனி புதுநகர் தட்டாங்குளம் ரோடு ரயில்வே ஓய்வூதியர் சங்கம் எதிர் உள்ளே தெருவில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக குப்பைகள் அகற்றப்படாமல் உள்ளது இந்தப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறது இது சம்பந்தமாக பலமுறை புகார் அளித்தும் எந்தவிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை உடனடியாக இந்த பிரச்சனையை சரி செய்து தருமாறு பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# சிறுமி பாலியல் வன்கொடுமை (POCSO) வழக்கில் குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 1 லட்சம் அபராதம்

## பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் 4 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு

இராணிப் பேட்டை,செப்11

இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப் பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டபகுதியில், கடந்த 13.06.2023 அன்று சிறுமி பாலியல் சம்பந்தப்பட்ட எதிரியான சந்திரன் வன்கொடுமை செய்த வழக்கில் (POCSO) (வ/55) என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வழக்கு இராணிப் பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று (10.09.2026) இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு மாண்புமிகு நீதிபதி அவர்கள், இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில், குற்றவாளி சந்திரன் (வ/55) என்பவருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் 4 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த அரசு வழக்கறிஞர் திரு. V.P. டில்லி, வழக்கின் புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. ஷாகின் மற்றும் நீதிமன்ற காவலர் WPC790 திருமதி.ஐஸ்வர்யா ஆகியோரை, இராணிப் பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.



பழநி முருகன் கோயிலில் விரைவு தரிசனம்செய்யவைப்பதாககூறும்இடைத்தரகர்கள், போலி வழிகாட்டிகள் (கைடுகள்) குறித்து பக்தர்கள் புகார் அளிக்கலாம் என தேவஸ்தானம் அறிவித்துள்ளது. பழநிதண்டாயுதபாணிசுவாமிகோயிலுக்குதினமும் வெளிமாவட்டங்கள், வெளிமாநிலங்களில்இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். பக்தர்கள் சிலர் வரிசையில் காத்திருக்காமல் விரைவு தரிசனம் செய்ய விரும்புகின்றனர்.

இவர்களை குறி வைத்து, இடைத்தரகர்கள், போலி வழிகாட்டிகள் (கைடுகள்) விரைவு தரிசனம் செய்ய வைப்பதாக கூறி பண மோசடியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் குறித்து ஒலிப்பெருக்கி மூலம் தேவஸ்தானம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.இருந்தும், இடைத்தரகர்கள், போலி வழிகாட்டிகளை நம்பி பக்தர்கள் பணத்தை இழக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்நிலையில் விரைவு தரிசனம் செய்ய வைப்பதாக கூறும் இடைத்தரகர்கள், போலி வழிகாட்டிகள்(கைடுகள்)குறித்துபுகார்அளிக்கலாம் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. இடைத்தரகர்கள் மற்றும் போலி வழிகாட்டிகள் யாரெனும் உங்களை வற்புறுத்தினால் உடனடியாக கோயில் நிர்வாகத்திடமோ அல்லது காவல் நிலையத்திலோபுகார்அளிக்கலாம்எனஆங்காங்கே எச்சரிக்கை அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலை மாவட்டத்தில்

# 13 ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

## ஆட்சியர் வந்தனா கார்க் நேரில் வாழ்த்து

திருவண்ணாமலை, செப்.11

பள்ளிக்கல்வித் துறையின் கீழ் சிறப்பாக பணியாற்றி வரும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் ஆசிரியர் தினத்தையொட்டி டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2026ஆம் ஆண்டிற்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 13 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளனர்.

விருது பெற்ற 13 ஆசிரியர்களும் இன்று (10.09.2026) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்கை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, சிறப்பாக பணியாற்றி மாநில அரசின் உயரிய ஆசிரியர் விருதை பெற்ற ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.



மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், அவர்களின் திறன்களை மேம்படுத்துவதிலும் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

அர்ப்பணிப்புடன் பணியாற்றி விருது பெற்ற ஆசிரியர்களின் சேவை மற்ற ஆசிரியர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# சாலையோரம் கண்டெடுக்கப்பட்ட குழந்தையை தத்துக்கொடுக்க ஆட்சேபனை இருப்பின் தகவல் தெரிவிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர், செப்டம்பர் 11:

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியத்தில் உள்ள நத்தம் அடுத்த காட்டுப்பகுதியில் சாலை ஓரம் உள்ள மரத்தடியில் 20.05.2026 அன்று இரவு 7.30 மணி அளவில் பிறந்த சில நாட்களே ஆன ஆண் குழந்தை கண்டறிந்தாகவும், பொதுமக்கள் வாயிலாக Child Helplineற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும், அக்குழந்தை 22.06.2026 மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் பணியாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரால் மீட்கப்பட்டு, திருவள்ளூர் குழந்தைகள் நலக்குழுவில் இக்குழந்தைக்கு மித்ரன் என்று பெயர் சூட்டப்பட்டு குழந்தை நலக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,மாவட்டகுழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர் ஆகியோர் முன்னிலையில், செஸ் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனத்திற்கு குழந்தை தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.



இக்குழந்தைக்கு உரியவர்கள் யாரேனும் இருப்பின் தங்கள் ஆட்சேபனையை இவ்வறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்.118, 'D' பிளாக், முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் 602 001 (தொலைபேசி எண்: 044–27665595, 6382613912) என்ற முகவரியில் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இக்குழந்தைக்கு சட்டபூர்வ தத்தெடுப்பு ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் 2022ன்படி Legally Free on Adoption வழங்கி தத்து கொடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.



பழநிமலைக்கோயிலுக்குஅருகேயுள்ளஇடும்பன்மலையில்இடும்பன்கோயில் அமைந்துள்ளது.பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் கட்டுப்பாட்டில் உள்ள இடும்பன் கோயிலில் கடந்த2000 பிப்.10ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இடும்பனுக்குரிய பெரிய கோயில் பழநியில் மட்டுமே உள்ளது. இங்கு 13அடி உயரத்தில் இடும்பன் காவடி தூக்கி வருவது போன்ற பிரமாண்ட சிலை உள்ளது. பிராத்தனை நிறைவேறிய பக்தர் ஒருவர் நேர்த்திக்கடனாக செலுத்திய, மெகா சைஸ் ஆணி காலணி சுவாமியின் பாதம் அருகில் வைக்கப்பட்டுள்ளது.பழநி மலை போல் 540 படிகளை ஏறி சென்றால் இடும்பன் கோயிலை அடையலாம். 25 ஆண்டுகளுக்கு பிறகு இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடத்த திட்டமிட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதற்கான, செங்கல்,ஜல்லிக் கற்கள் உள்ளிட்ட கட்டுமான பொருட்களை படி வழியாகவோ, தலைச் சுமையாகவோ மலைக்கு கொண்டு செல்வதில் சிரமம் உள்ளது. எனவே, மலை உச்சியில் உள்ள இடும்பன் கோயிலுக்கு கட்டுமான பொருட்களை'இழுவை ரயில்' மூலம் கொண்டு செல்ல திட்டமிட்டு, மலை அடிவாரத்தில் இருந்து மலை உச்சி வரை 328 அடி தூரத்துக்கு தண்டவாளம் அமைக்கும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது. தற்போது இப்பணிகள் நிறைவு பெற்று, 'டிராலி' மூலம் பொருட்களை கொண்டு செல்ல தயார் நிலையில் உள்ளது.

# KGF பி.இ.எம்.எல். நகரில் கோலாகலமாக நடைபெற்ற 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா

KGF பி.இ.எம்.எல். நகரில் கோலாகலமாக நடைபெற்ற 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா!

கிருஷ்ணர், ராதை வேடத்தில் அசத்திய குழந்தைகள் – கண்கவர் நடன நிகழ்ச்சிகளால் களைகட்டிய விழா!

பக்தி... பாரம்பரியம்... குழந்தைகளின் கலைத்திறமை... இந்த மூன்றும் ஒரே இடத்தில் சங்கமித்த நிலையில், KGF பி.இ.எம்.எல். நகரில் 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி மகோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

KGF பி.இ.எம்.எல். நகரில் உள்ள பி.இ.எம்.எல். கலாக்ஷேத்ரா அரங்கில், பி.இ.எம்.எல். யாதவ சங்கம் சார்பில் இந்த 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி மகோத்ஸவம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பை கொண்டாடும் வகையில் நடைபெற்ற இந்த விழாவில், பி.இ.எம்.எல். நகரைச் சேர்ந்த ஏராளமான கிருஷ்ண பக்தர்கள், பெற்றோர்கள், சிறுவர்–சிறுமிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். விழாவையொட்டி குழந்தைகளுக்காக சிறப்பு மாறுவேடப் போட்டி மற்றும் *Fancy Dress* நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில்சிறுவர்–சிறுமிகள் ஸ்ரீ கிருஷ்ணர், ராதை உள்ளிட்ட பல்வேறு தெய்வீக வேடங்களை அணிந்து மேடையில் தோன்றினர்.

கிருஷ்ணர் வேடத்தில் அழகாக அலங்கரிக்கப்பட்ட சிறுவர்–சிறுமிகள், தங்களது அழகான தோற்றத்தாலும், தெய்வீக வேடங்களாலும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தனர்.

குழந்தைகளின் இந்த மாறுவேட நிகழ்ச்சியை பெற்றோர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். தங்களது குழந்தைகள் மேடையில் தன்னம்பிக்கையுடன் பங்கேற்பதை கண்டு பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சிறுவர்–சிறுமிகளின் அழகிய வேடங்கள், அவர்களின் நடிப்பு மற்றும் மேடையில் அவர்கள் வெளிப்படுத்திய திறமைகள் விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தன.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

கிருஷ்ணரைப் போற்றும் பல்வேறு பாடல்களுக்கு குழந்தைகள் உற்சாகமாக நடனமாடி தங்களது கலைத்திறமையை வெளிப்படுத்தினர்.

கிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் பக்தியை பிரதிபலிக்கும் வகையில் நடைபெற்ற இந்த நடன நிகழ்ச்சிகளில், குழந்தைகள் தங்களது திறமையை அழகாக வெளிப்படுத்தினர்.

குழந்தைகள் மேடையில் நடனமாடியபோது, அரங்கில் கூடியிருந்த பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினர்.

ஒவ்வொரு குழந்தையின் கலைநிகழ்ச்சியும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது டன், குழந்தைகளின் திறமையை அனைவரும் பாராட்டினர்.

இந்த விழாவில் பி.இ.எம்.எல். கே.ஜி.எஃப். பிரிவின் செயல் நிர்வாக இயக்குநர் திரு. யோகானந்த் ஜி. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுவிழாவை சிறப்பித்தார்.

மேலும், திரு. லேகன கௌடா, பி.இ.எம்.எல். யாதவ சங்கத் தலைவர் திரு. முரளி, கே.ஜி.எஃப். தாலுகாயாதவ சங்கத்தைச் சேர்ந்த திரு. உமேஷ் யாதவ், திரு. சங்கர், திரு. ராமச்சந்திர யாதவ், திரு. சுந்தரமூர்த்தி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட முக்கிய நிர்வாகிகள்மற்றும்சிறப்புஅழைப்பாளர்கள், குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளை கண்டு ரசித்து அவர்களை பாராட்டினர்.

ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி என்பது பக்தியுடன் மட்டுமல்லாமல், நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் ஒரு முக்கியமான திருநாளாகவும் உள்ளது.

அந்த வகையில், குழந்தைகளை கிருஷ்ணர் மற்றும் ராதை உள்ளிட்ட தெய்வீக வேடங்களில் பங்கேற்கச் செய்து, அவர்களின் கலைத்திறமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கிய இந்த நிகழ்ச்சி, பெற்றோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

ஒருபுறம் கிருஷ்ணர் மற்றும் ராதை வேடங்களில் காட்சியளித்த குழந்தைகள்... மறுபுறம் கிருஷ்ணர் பாடல்களுக்கு உற்சாகமாக நடனமாடிய சிறுவர்–சிறுமிகள்... இவற்றை ரசித்துக் கொண்டிருந்த பெற்றோர்கள் மற்றும் பக்தர்கள்...

இதனால் பி.இ.எம்.எல். கலாக்ஷேத்ரா அரங்கமே முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. குழந்தைகளின் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பார்வையாளர்கள் உற்சாகமாக கைதட்டி பாராட்டு தெரிவித்தனர்.

குறிப்பாக, குழந்தைகளின் மாறுவேட நிகழ்ச்சியும், தொடர்ந்து நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளும் இந்த ஆண்டின் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழாவின் முக்கிய சிறப்பம்சங்களாக அமைந்தன.



விழாவில் கலந்து கொண்ட கிருஷ்ண பக்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள், குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கண்டு ரசித்து, அவர்களை தொடர்ந்து உற்சாகப்படுத்தினர்.

பக்தி மற்றும் பாரம்பரியத்தை குழந்தைகளின் கலைத்திறமையுடன் இணைத்த இந்த நிகழ்ச்சி, பி.இ.எம்.எல். நகரில் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழாவை மேலும் சிறப்பானதாக மாற்றியது.

42 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி மகோத்ஸவம், பி.இ.எம்.எல். யாதவ சங்கத்தின் பாரம்பரியமான நிகழ்வாகவும், பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்ற நிகழ்வாகவும் அமைந்துள்ளது. இந்த ஆண்டு நடைபெற்ற விழாவிலும் ஏராளமானோர் கலந்து கொண்டு குழந்தைகளின் திறமைகளை கண்டு ரசித்தனர்.

பக்தி நிறைந்த சூழல்... கிருஷ்ண நாமம் முழங்கிய அரங்கம்... தெய்வீக வேடங்களில் மிளிர்ந்த குழந்தைகள்... கண்கவர் நடன நிகழ்ச்சிகள்...

என, KGF பி.இ.எம்.எல். கலாக்ஷேத்ரா அரங்கில் நடைபெற்ற 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி மகோத்ஸவம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

மொத்தத்தில், பக்தி, பாரம்பரியம் மற்றும் குழந்தைகளின் கலைத்திறமையை ஒருங்கிணைத்த இந்த 42வது ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி மகோத்ஸவம், பி.இ.எம்.எல். கலாக்ஷேத்ரா அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்று, அனைவரது பாராட்டையும் பெற்றது.


தேசபக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 2025 2026ஆம் கல்வியாண்டிற்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற 13 பள்ளிக் கல்வித்துறையை சார்ந்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா சந்தித்து வாழ்த்து பெற்றனர். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரா.அறிவழகன், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் (பொ)) லிங்கேஸ்வரன், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் உடனிருந்தனர்.

### (Weavers Service Centre) சார்பில்

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் மத்திய அரசின் கீழ் இயங்கும் நெசவாளர் சேவை மையம்

## 178 நெசவாளர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலான தறி உபகரணங்கள் வழங்கினார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் மத்திய அரசின்கீழ் இயங்கும் நெசவாளர் சேவை மையம் (*Weavers Service Centre*) சார்பில் 178 நெசவாளர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலான தறி உபகரணங்கள் வழங்கினார்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.09.2026) கலவை வட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், வாழைப்பந்தல் செங்குந்தர் திருமண மண்டபத்தில் மத்திய அரசின் கீழ் இயங்கும் நெசவாளர் சேவை மையம் (*Weavers Service Centre*) காஞ்சிபுரம் மற்றும் கைத்தறித்துறை, வேலூர் சார்பில் 178 நெசவாளர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலான தறி உபகரணங்கள் வழங்கினார்.

கூட்டுறவு அமைப்பை சார்ந்த கைத்தறி நெசவாளர்களுக்கு மாநில அரசின் மூலம் வழங்கும் நலத்திட்டங்கள் போன்றே கூட்டுறவு அமைப்பை சாராத தனியார் நெசவாளர்களும் பயனடையும் வகையில் மத்திய அரசின்கீழ் இயங்கும் நெசவாளர் சேவை மையம் (*Weavers Service Centre*) மூலம் நலத்திட்ட உதவிகளும் வழங்கி வருகின்றன.







அந்த வகையில் இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி வட்டத்தை வளர்ச்சியை நோக்கிய வட்டமாக (*Aspirational Block*) மாற்றும் வகையில் வாழைப்பந்தல் கிராமத்தை சேர்ந்த தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 90 சதவீத மானிய விலையில் தறி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மேலும், இவ்விழாவில் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளான தறி உபகரணங்கள் 240 Hook ஜக்கார்டு பெட்டி 69, மோட்டார் பொருத்திய ஜக்கார்டு *Lifiting Machine* 65, (*Motorized Pirn cum Dubba Winding Machine*) 28, தறிக்கூடம் (*Workshed*) 3. நெசவாளர்கள் அடையாள அட்டை (*Pechchan Card*) 10. (*Free EB*) 3 ஆகியவை வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மொத்தம் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான தறி உபகரணங்கள் கூட்டுறவு அமைப்பை சாராத 178 தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் நெசவாளர் சேவை மையம் திரு.கார்த்திகேயன், உதவி இயக்குநர் கைத்தறித் துறை திரு.தமிழ்செல்வன், ஊராட்சி மன்ற தலைவர் திரு. முனுசாமி, கைத்தறி அலுவலர் திரு.ஜெகதீசன், நெசவாளர் சேவை மையம் திருமதி.வித்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசியல் வரலாற்றில் பேரதிசயம் படைத்த மக்கள்; தவெகவை அங்கீகரித்த தேர்தல் ஆணையம் - விஜய் நன்றி

சென்னை, செப்.11

“30 ஆண்டுகளுக்கும் மேலாக அளவற்ற அன்பை வழங்கி, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவனாகவும், உறவாகவும், மகனாகவும், அண்ணனாகவும், தம்பியாகவும் ஏற்றுக்கொண்ட தமிழக மக்களுக்கும் உலகத் தமிழ் உறவுகளுக்கும் எவ்வாறு நன்றிக்கடன் செலுத்துவது என சிந்தித்ததன் வெளிப்பாடாகவே 2024ம் ஆண்டு தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கினோம்” என்று அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் தமிழக மக்கள் அனைவருக்கும் வணக்கம். 30 ஆண்டுகளுக்கும் மேலாக அளவற்ற அன்பை வாரி வழங்கி, வாழ்வில் கிடைத்தற்கரிய உயரிய இடத்தை பேரன்புடன் அளித்து, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவனாகவும், உறவாகவும், மகனாகவும், அண்ணனாகவும், தம்பியாகவும் ஒவ்வோர் இல்லத்திலும் உள்ளத்திலும் நிரந்தர இடத்தை வழங்கி தாயன்புடன் தாங்கி வருகின்றீர்கள்.



எல்லாவற்றையும் அளித்த ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் உலகத் தமிழ் உறவுகளுக்கும் எவ்வாறு நன்றியைத் திருப்பிச் செலுத்துவது என்று யோசித்தோம். அதன் வெளிப்பாடாகவும், மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நோக்கத்துடனும் 2024ம் ஆண்டு தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கினோம்.

மதச்சார்பற்ற சமூகநீதிக் கொள்கையுடன் அரசியல் களம் கண்டே 27 மாதங்கள்தான் ஆகின்றன. ஆனால், அதற்குள் தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை எவருக்கும் கிடைத்திராத பேரதிசயத்தை கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.

35 சதவீத வாக்குகளுடன் தமிழக வெற்றிக் கழகத்தை தனிப்பெரும் கட்சியாக மக்கள் உயர்த்திப் பிடித்துள்ளனர். மக்களின் தீர்ப்பை மதித்த ஜனநாயக சக்திகளின் ஆதரவுடன், தமிழக மக்களின் முதல் சேவகனாக முதலமைச்சராக விஜய் செயல்பட்டு வருகிறார். ஊழலற்ற, நேர்மையான நிர்வாகத்தை லட்சியமாகக் கொண்டு, மதச்சார்பற்ற சமூகநீதிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட வெற்றிக் கூட்டணியை அமைத்து, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியை நிறுவியுள்ளோம். தமிழக அரசியல் வரலாற்றில் மக்கள் நிகழ்த்திக் காட்டிய இந்த பேரதிசயத்தின் மற்றொரு முக்கிய அங்கமாக, இந்திய தேர்தல் ஆணையம் தமிழக வெற்றிக் கழகத்தை தமிழகம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக அறிவித்துள்ளது.

மேலும், ஜனநாயகப் புரட்சியை சத்தமில்லாமல் நிகழ்த்திய மக்களின் விசில் சின்னத்தையும் தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் சின்னமாக தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது.

மதச்சார்பற்ற சமூகநீதிக் கொள்கையுடன் நம்மை நம்பும் ஒட்டுமொத்த மக்களுக்கான நன்றிக்கடன் பணி என்றென்றும் தொடரும். மக்கள் வழங்கிய பேரன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய முறையில் பணியாற்றுவதே தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். இந்த வேளையில், பேருழைப்பை வழங்கி கழகத்தை காத்து வரும் தோழர்களையும் நிர்வாகிகளையும் நெகிழ்வுடன் நினைவுகூர்கிறேன். அவர்களின் உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களுக்கும் உலகத் தமிழ் உறவுகளுக்கும் மீண்டும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.





திண்டுக்கல் மாவட்டம் பழனி தமிழக அரசு செப்டம்பர் 25ல் தாய்மாமன் தங்க மோதிர கிட்ட தொடக்க விழா நடைபெறுவதை முன்னிட்டு பழனி மாவட்ட தலைமை மருத்துவமனையை மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா தேவி அவர்கள் விழா நடைபெறும் இடத்தை ஆய்வு செய்தபோது எடுத்த படம் அருகில் பழனி மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டன

# மேகமலை சோதனைச் சாவடிகளில் வனக்கிராம மக்களுக்கு அதிகரிக்கும் நெருக்கடிகள்

மேகமலை வனக்கிராம மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து வரும் நிலையில், இங்குள்ள சோதனைச் சாவடிகளில் தற்போது நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. மேகமலைப் பகுதியில் 5,072 ஹெக்டேர் பரப்பை 4,601 பேர் ஆக்கிரமித்துள்ள தாக நீதிமன்றப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 1,595 பேர் நிரந்தர வீடும், காடு சார்ந்த வாழ்வாதாரமும் கொண்டவர்கள், 233 பேர் தற்காலிக வீடும், காடு சார்ந்த வாழ்வாதாரம் கொண்டவர்கள், 2,773 பேர் காட்டில் விவசாயத்தை மட்டுமே சார்ந்தவர்கள் என தமிழக அரசு வகைப்படுத்தியுள்ளது. இவர்களை மூன்று வகையாக வகைப்படுத்தி வனத்தில் இருந்து வெளியேற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் அடுத்தடுத்து தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் வனத்துறையின் கட்டுப்பாடுகள் இங்கு அதிகரித்துள்ளன. மலைக்கிராமங்களைக் கண்காணிக்க கொம்புக்காரன்புலியூர், மஞ்சனூத்து, மல்லப்புரம் உள்ளிட்ட இடங்களில் பிரதான சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA